# தவறுகளைத் தவிர்க்க – இணைந்து உதவுங்கள்!

## வைத்தியசாலையில் உங்கள் பாதுகாப்பு









**patientensicherheit** schweiz
**sécurité des patients** suisse
**sicurezza dei pazienti** svizzera
**patient safety** switzerland

# பதிப்புரை


**வெளியீட்டாளர்**

நோயாளர் பாதுகாப்புக்கான நிறுவனம்
Stiftung für Patientensicherheit
Asylstrasse 77
CH-8032 Zürich
Telefon 043 243 76 70
info@patientensicherheit.ch
www.patientensicherheit.ch

**உள்ளடக்கமும் பதிப்பாசிரியர்களும்**

PD Dr. rer. med. David Schwappach
Dr. sc. hum. Olga Frank
Dr. med. Marc-Anton Hochreutener
அத்துடன் சுகநலப்பிரிவிலுள்ள எண்ணிலடங்காத நிபுணர்களும்

**மொழிபெயர்ப்பு**

சுமதி மாணிக்கப்போடி

**விளக்கப்படங்கள்**

PD Dr. med. Thomas J. Strasmann

**வடிவமைப்பு**

René Habermacher, Visuelle Gestaltung, Zürich

**ஆதரவு**

ஐக்கிய அரசின் சுகநலப்பிரிவுக்கான அமைச்சுக்கூடாகவும் (BAG) miges plus அமைப்புக்கூடாகவும் Migesplus இன் தேசிய குடிவரவும் சுகநலமும் 2008–2013 என்னும் செயற்றிட்டத்தின் நிபுணத்துவ, நிதியுதவியூடாக இக் கையேடு உருவாகியுள்ளது.
www.migesplus.ch பல்வேறு மொழிகளில் சுகநலத்தகவல்கள், சுவிஸ் செஞ்சிலுவைச்சங்கம், சுகநலத்துக்கும் குடிவரவுக்குமான திணைக்களம்



**பதிப்புரிமை**

நோயாளர் பாதுகாப்புக்கான நிறுவனம், சூரிச்



**முதலாம் பதிப்பு**

சூரிச், சித்திரை 2013

Schweizerische Eidgenossenschaft
Confédération suisse
Confederazione Svizzera
Confederaziun svizra

Eidgenössisches Departement des Innern EDI
**Bundesamt für Gesundheit BAG**




- Bei Sprachproblemen fragen Sie nach einem Dolmetscher.
- Dille ilgili bir sorununuz olursa lütfen bir tercüman isteyiniz.
- Ask for an interpreter if you need one.
- Ako imate jezičnih poteškoća, obratite se prevoditelju.
- Në qoftë se keni problem me gjuhën, pyesni për ndonjë përkthyes.
- U slučaju da ne razumete jezik, potražite prevodioca.
- Heger problêm û astengiyên weyên ziman hebin, wergerênerekî (Tercûmanekî) bixwazin.
- Caso tenha problemas linguísticos, solicite o apoio de um intérprete.
- Si tiene problemas con el idioma, consulte a un intérprete.
- В случае затруднений с языком запросите содействия переводчика.
- En cas da problemslinguisticsdumandai p.pl. suenterin interpret.
- மொழிப்பிரச்சினை இருப்பின், மொழிபெயர்ப்பாளர் தேவை எனக் கேளுங்கள்.

# உள்ளடக்கம்

பக்கம்


தவறுகளைத் தவிர்க்க – இணைந்து உதவுங்கள்! வைத்தியசாலையில் உங்கள் பாதுகாப்பு 2

உறவினர்களும் நண்பர்களும் 6

பிள்ளைகள், உணர்விழந்த- ஆற்றல் மட்டுப்படுத்தப்பட்ட நோயாளர்கள் 7

தகவல் கொடுத்தல் – தகவல் தெரிதல் 8

கைகளைத் தொற்று நீக்குதல் 10

மருந்துகள் 12

சிறிய அறுவைச்சிகிச்சைகள், பெரிய சத்திரசிகிச்சைகளின் போது 14

குழப்பங்களைத் தவிர்த்தல் 16

வெளியேறுதல் 18

ஏற்படக்கூடிய ஒரு தவறு நடந்துவிட்டால், எவ்வாறு நடந்துகொள்வது? 20

இந்த ஆவணத்தின் உரிமையாளர்

எனது மருந்துகள்

இந்த மருந்துகள் எனக்கு ஒத்துக்கொள்வதில்லை

வினாக்கள், வேறு முக்கிய தகவல்களும் குறிப்புகளும்

# தவறுகளைத் தவிர்க்க – இணைந்து உதவுங்கள்!






- வைத்தியசாலையில் நீங்கள் தங்கியிருக்கும்போது, அனைத்தும் நல்லபடியாக நடைபெற, நோயாளராக, பெற்றோராக, உறவினராக நீங்கள் எங்களுக்கு உதவலாம்.

உங்களுக்கும் எங்களுக்கும் – நமக்கு ஒரு பொதுவான இலக்குண்டு: நீங்கள் வைத்தியசாலையில் நல்ல முறையில் தங்கியிருக்க வேண்டும் என்பது எமது விருப்பம். உங்கள் சிகிச்சையின்போது, எந்தத் தவறுகளும் ஏற்படாதபடி எல்லா நடவடிக்கைகளையும் எடுப்போம். இருந்த போதிலும்:

ஒரு வைத்தியசாலையிலும் தவறுகள் நடைபெறலாம் – மனிதர் வேலை செய்கின்ற அனைத்து இடங்களிலும் நடைபெறுவது போல.

நோயாளராக, பெற்றோராக அல்லது உறவினராக தவறுகளைத் தவிர்க்க நீங்கள் பங்களிக்கலாம்.

- கேள்விகளைக் கேளுங்கள்.
- உங்கள் அவதானிப்பின்போது, அது உங்களுக்குச் சந்தேகத்தை ஏற்படுத்தினால், எமக்கு அதனைக் கூறுங்கள்.

அது நோயாளர்பாதுகாப்புக்கான உங்களது ஒரு சுய பங்களிப்பு! பொதுவாக அதனூடாக நீங்கள் உதவுகின்றீர்கள்: வைத்தியசாலைக்குத் தனது தவறு தெரிந்தால், அது அதனூடாகக் கற்றுக்கொண்டு, எதிர்காலத்தில் தவறுகளைத் தவிர்க்கலாம்.

இனிவரும் பக்கங்களில் முக்கியமான பரிந்துரைகளைக் காண்பீர்கள். எங்கு நீங்கள் கவனம் செலுத்த முடியும், எவ்வாறான வினாக்களை நீங்கள் கேட்க முடியும் என்கின்ற சிறு தகவல்களை நீங்கள் காண்பீர்கள். சிலவேளை அனைத்துப் பரிந்துரைகளும் உங்களுக்குப் பொருத்தமானதாக இல்லாமலுமிருக்கலாம். இருந்தபோதிலும் அனைத்துச் சிறு தகவல்களையும் கவனமாகப் படித்துப் பாருங்கள். விளங்காதிருக்கும் பட்சத்தில், வைத்தியப்பராமரிப்பாளர்களை அல்லது வைத்தியரை நாடுங்கள்.

**மிக முக்கியம்:** சில வேளைகளில் கேள்வி கேட்பதற்கோ அல்லது எதையாவது கூறுவதற்கோ உங்களுக்குத் தயக்கமாக இருக்கலாம். அதற்குச் சிலவேளைகளில் தைரியம் தேவைப்படும் என்பதும் எங்களுக்குத் தெரியும். ஆனால் பேசுவது பிரயோசனமானது. உங்களை நீங்களே நம்பாதிருப்பதன் மூலம், எதையாவது கூறாதிருப்பது அல்லது கேட்காதிருப்பது போன்ற தவறான பாதைக்கு உங்களை நீங்களே வழி நடத்தாதீர்கள்!

உறுதியாக ஆனால் நட்பாக இருங்கள். இங்கு வேண்டப்படுவது கூட்டுறவேயன்றி முரண்பாடு அல்ல.

மொழிப்பிரச்சினை இருக்குமாயின் ஒரு மொழிபெயர்ப்பாளர் தேவை எனக் கூறுங்கள்.

இந்த சிபார்சுகளை நீங்கள் கவனத்திற்கொண்டால், நாங்கள் மகிழ்ச்சியடைவோம். ஆனால் அது சுய விருப்பத்துக்குரியது. உங்கள் பாதுகாப்புக்கான பொறுப்பு எப்போதும் வைத்தியசாலைக்குரியது. சுகநலக் காரணங்களுக்காக அல்லது இதர காரணங்களுக்காகக் குறிப்பிட்ட சிபார்சுகளை நீங்கள் கவனத்திற்கொள்ள முடியாது போய் விட்டால், அது உங்களுக்கு எந்தத் தீமையையும் ஏற்படுத்தாது.

உதாரணம்:

திருமதி சுவைற்ஸர் ஒரு இருதயநோய் காரணமாக வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார். வைத்தியர் அவருக்கு ஒரு புதிய மருந்தை எழுதிக் கொடுத்துள்ளார். சில நாட்களாக அவருக்கு அந்தப் புதிய மருந்து கொடுக்கப்படுகின்றது. அந்த மருந்து பார்வைக்கு எப்படி இருக்குமென்றும் தான் எத்தனை மாத்திரைகளை உட்கொள்ள வேண்டும் என்பதும் அவருக்குத் தெரியும். ஒரு நாட்காலை இரவு வேலையில் ஈடுபட்டிருந்த வைத்தியப்பராமரிப்பாளர், காலைச்சாப்பாட்டுக்கு முன் அருந்தப்பட வேண்டியது என்று கூறி மருந்தைக் கொண்டு வந்து கொடுத்தார். திருமதி சுவைற்ஸர் அந்த மருந்தைப் பார்த்தார். அதில் வழமைக்கு மாறாக ஒரு மாத்திரை அதிகமாக இருப்பதை உறுதிப்படுத்திக் கொண்டார். அதனை வைத்தியப்பராமரிப்பாளரின் கவனத்துக்குக் கொண்டு வந்தார். அதனை வைத்தியப்பராமரிப்பாளர் பரிசீலித்து, உண்மையில் அங்கு ஒரு மாத்திரை அதிகமாகக் கொடுக்கப்பட்டுள்ளதை உறுதிப்படுத்தினார். தகவல் தெரிவித்ததையிட்டு வைத்தியப்பராமரிப்பாளர் மகிழ்ச்சியடைந்தார். திருமதி சுவைற்ஸர் அவர்களின் அவதானிப்பினூடாக ஒரு தவறைத் தவிர்க்கக் கூடியதாக இருந்தது.

உதாரணம்:

திரு சூர்கர் அவர்களும் திரு பாஸ்லர் அவர்களும் ஒரு சத்திரசிகிச்சையின் பின் வைத்திய-சாலையில் ஒரே அறையினுள் அனுமதிக்கப்பட்டுள்ளார்கள். இருவருக்கும் சத்திரசிகிச்சையினால் ஏற்பட்ட ஒரு காயம் உள்ளதுடன் அதற்கு மருந்தும் கட்டப்பட்டுள்ளது.
வைத்தியர்பார்வைநேரத்தின்போது, திரு சூர்கர் அவர்களின் காயத்துக்குப் போடப்பட்டிருந்த கட்டினை வைத்தியர் திறந்தார். அவரது சத்திரசிகிச்சைக் காயத்தைப் பரிசீலித்தார். அதன் பின்பு அவர் திரு பாஸ்லர் அவர்களின் சத்திரசிகிச்சைக் காயத்தையும் பரிசீலிக்க விரும்பினார். அவர் அவசரத்தில், இடையில் கைகளைத் தொற்றுநீக்கம் செய்ய மறந்து விட்டார். திரு பாஸ்லர் அவர்கள் வைத்தியரிடம் காயத்துக்கான கட்டுகளை இருவருக்கிடையில் பரிசீலிக்கும்போது, கைகளைத் தொற்றுநீக்க வேண்டும் என்கின்ற அவசியமில்லையா என்று வினாவினார். வைத்தியர் அவரது தகவலுக்காக நன்றியைத் தெரிவித்துக் கொண்டார். அவர் தான் முன்பு செய்யத்தவறியதை, திரு பாஸ்லர் அவர்களின் காயத்தைப் பரிசீலிக்கு முன், கைகளைத் தொற்றுநீக்கம் செய்து கொண்டார். தனது வினாவினூடாக திரு பாஸ்லர் அவர்கள், வைத்தியரின் கைகளினூடாத் தனது காயத்துக்குப் பரவக் கூடிய கிருமிகளைத் தவிர்த்துக் கொண்டார்.

# உறவினர்களும் நண்பர்களும்




■ உங்கள் உறவினர்களும் அல்லது நண்பர்களும் கூட உங்கள் பாதுகாப்புக்குப் பங்களிப்பதுடன் தகவல்களையும் கவனத்தில் கொள்ளலாம்.

உங்கள் உறவினர்கள் அவதானமாக இருப்பதுடன் உங்களுக்காக அவர்கள் கேள்விகளைக் கேட்கலாம். இரண்டு கண்களை விட நான்கு கண்கள் மேலதிகமாகப் பார்க்க முடியும். இரண்டு காதுகளை விட நான்கு காதுகள் மேலதிகமாகக் கேட்க முடியும். அது உங்களுக்கு ஓர் ஆதரவாக இருக்குமானால், ஓர் உறவினரையோ அல்லது ஒரு நண்பரையோ உடன் வருமாறு கேளுங்கள்.

# பிள்ளைகள், உணர்விழந்த- ஆற்றல் மட்டுப்படுத்தப்பட்ட நோயாளர்கள்

இந்தக் கையேட்டிலுள்ள அனைத்துத் தகவல்களும் சிபார்சுகளும், பிரத்தியேகமாக இவர்களுக்கு உரியது

- பிள்ளைகளின் பெற்றோருக்கு
- தீர்மானமெடுக்கும் ஆற்றல் மட்டுப்படுத்தப்பட்ட வயதுக்குவந்த நோயாளர்களின் உறவினருக்கு: உதாரணமாக Demenz (ஞாபகமறதிநோய்) மயக்க நிலையிலுள்ளவர்கள் அல்லது உளவியல் குறைபாடுள்ள நோயாளர்கள்.

பெற்றோராகிய நீங்கள் உங்கள் பிள்ளையை மிக நன்கு அறிவீர்கள். உறவினராகிய நீங்கள் வைத்தியரையும் வைத்தியப்பராமரிப்பாளர்களையும் விட நோயாளரை நன்கு அறிந்திருப்பீர்கள். இங்கு, உங்களுடைய அபிப்பிராயம் நமது இணைந்த வேலைக்கு முக்கியமானதும் பிர-யோசனமானதுமாகும்!

பெற்றோராகிய உங்களுக்கு, உங்கள் பிள்ளையுடனிருக்கும் உரிமையுள்ளது. இது பரிசோதனைகளின் போதும், சிகிச்சைகளின் போதும், பராமரிப்பு விடயங்களின் போதும் பொருந்தும். ஒருவேளை நீங்கள் அங்கிருப்பது விரும்பப்படவில்லை அல்லது வாய்ப்பில்லை என்னும் சந்தர்ப்பத்தில் அதற்கான விளக்கத்தை நீங்கள் கோருங்கள்.



- வயதுக்குவந்த, தீர்மானமெடுக்கும் ஆற்றல் மட்டுப்படுத்தப்பட்ட நோயாளர்களின் உறவினருக்கு இது பொருந்தும்.

# தகவல் கொடுத்தல் – தகவல் தெரிதல்




■ எங்களைப் பற்றி உங்களுக்கும், உங்களைப் பற்றி எங்களுக்கும் எவ்வளவு அதிகமாகத் தெரிகின்றதோ, அவ்வளவுக்கதிகமாக உங்கள் வைத்தியசாலைத் தங்கலும் பாதுகாப்புடையதாக இருக்கும்.

எந்தெந்த வைத்தியர்களும் வைத்தியப்பராமரிப்பாளர்களும் உங்களுக்குப் பொறுப்பானவர்கள் என்பதனை, நீங்கள் வைத்தியசாலையில் அனுமதிக்கப்படும் போது, கேளுங்கள்.

உங்கள் நோய் பற்றியும் மருந்துகள் பற்றியும் வைத்தியர்களுக்கும் வைத்தியப்பராமரிப்பாளர்களுக்கும் தகவல் தெரிவியுங்கள். உங்கள் ஒவ்வாமைநோய் பற்றி அறிவிக்க மறந்து விடாதீர்கள். உதாரணமாக கீழ்க்காணும்பவற்றுக்கு ஒவ்வாமைத்தன்மை இருப்பது:

- மருந்துகள்
- உணவுப்பொருட்கள்
- வைத்தியசாலையில் பாவிக்கப்படுகின்ற தொற்றுநீக்கி, பிளாஸ்ரர், Kontrastmittel (உடல் உள்ளுறுப்புகளைக்

கதிர்வீச்சுப்படம் எடுப்பதற்கு முன்பாக நோயாளிக்குக் கொடுக்கப்படும் ஒரு வகைச் சாயம் – நிறப்பொருள்) போன்றன
- வேறு பொருட்களுக்கான ஒவ்வாமை

ஒவ்வொரு பரிசோதனையையும், சிகிச்சையையும், ஒவ்வொரு புதிய மருந்தையும்,

- ஏன் இது தேவைப்படுகின்றது,
- எப்படியான பிரதிபலன்களும் விளைவுகளும் இதற்குண்டு,
- எவ்வாறு இந்தப் பரிசோதனைகள் அல்லது சிகிச்சைகள் நடைபெறப் போகின்றன,
- யாரால் இவை செயற்படுத்தப்படப் போகின்றன என்பது பற்றி, நீங்கள் விளங்கிக் கொண்டிருக்க வேண்டும்.

உங்களுக்கு இது விளங்காதிருக்குமானால் அது பற்றிக் கேளுங்கள்! வைத்தியப்பராமரிப்பாளர்களுடன் அல்லது வைத்தியர்களுடன் சொந்த வார்த்தைகளில் மீண்டுமொருமுறை கலந்துரையாடுவது உதவியாக இருக்கும். அதற்கு முயற்சியுங்கள்!

அனைத்தும் சரியாக நடைபெறுகின்றா என்பதில் உங்களுக்கு நிச்சயமில்லாதிருந்தால், அது பற்றிக் கேளுங்கள். நீங்கள் அதனை விளங்கிக் கொள்ளுமட்டும் கேளுங்கள்.

உங்களுக்கு எதிரெதிரான தகவல்கள் கிடைத்திருந்தால், எப்போதும் ஒரு தெளிவான தகவலைக் கோருங்கள்!

நீங்கள் ஏதாவது கேட்க வேண்டுமாயின், அதனை இயலுமானளவு உடனடியாகக் கேளுங்கள். எந்தக் கேள்வியையும் கேட்பதற்கு அடுத்தநாள் வரை காத்திருக்காதீர்கள்! ஒரு பிரச்சினையைப் பல தடவைகள் குறிப்பிடுவதற்கு அல்லது கேட்பதற்குக் கூச்சப்படாதீர்கள். வேலை செய்பவர்கள் மாறினாலும் கூட.
நீங்கள் இக் கையேட்டிலுள்ள மேலதிகப் பக்கத்திலும் அதனைக் குறித்துக் கொள்ளலாம்.

உங்களுக்குப் புதிய அறிகுறிகள் தென்பட்டால், அதனை வைத்தியப்பராமரிப்பாளர்களிடம் அல்லது வைத்தியரிடம் தெரியப்படுத்துங்கள். உதாரணமாக உங்களுக்கு வலி அல்லது மூச்சுத்திணறல் ஏற்பட்டால்!

பெற்றோராகிய அல்லது உறவினராகிய நீங்கள், உங்கள் பிள்ளையின் அல்லது உறவினரின் உடல்நிலை மோசமடைந்திருப்பதாக உணர்ந்தால், உடனடியாக வைத்தியப்பராமரிப்பாளர்களிடம் அல்லது ஒரு வைத்தியரிடம் அதனைத் தெரியப்படுத்துங்கள். அவர்களது விளக்கங்கள் தெளிவாகவும் திருப்தியானதாகவும் இருக்கும் வரையும் நீங்கள் அது பற்றிக் கேளுங்கள்.

# கைகளைத் தொற்று நீக்குதல்




## ■ தொற்றுநோயைத் தடுக்க, இணைந்து உதவுங்கள்.

வைத்தியசாலையில் தொற்றுநோய் அடிக்கடி ஏற்படும். தொற்றுநோயைத் தடுப்பதற்கு, நோயாளிகளுக்கிடையில் கிருமிகள் (பற்றீரியா, வைரசுக்கள்) காவிச் செல்லப்படாதிருப்பது முக்கியமாகும். கைகளைத் தொற்று நீக்கம் செய்வது மிகச் சிறந்த வழியாகும் (கைகளை ஒரு மதுசாரக்கலவை கொண்டு சுத்தம் செய்யவும்)!

ஒவ்வொரு முறையும் ஒரு நோயாளியுடன் செயற்படும் போதும் ஒவ்வொரு முறையும் உடலினைத் தொடும் முன்பும் வைத்தியப்பராமரிப்பாளர்கள், வைத்தியர்கள், இதர சிகிச்சையளிப்பவர்கள் கைகளைத் தொற்று நீக்கம் செய்ய வேண்டும். இருந்தபோதிலும் இது அடிக்கடி மறந்து போவதுண்டு. கையுறைகளை அணியும் முன்பும்: கை- களைத் தொற்று நீக்கம் செய்த பின்புதான், கையுறைகளை அணிய வேண்டும்.

வேலையிலீடுபடுகின்றவர்கள் கைகளைத் தொற்று நீக்கம் செய்கின்றார்களா என்பதை அவதானியுங்கள். அது ஒரு பெரிய உதவியாகும்.

உதவியாளர்கள் உங்கள் முன்னிலையில் ஒரு மதுசாரக்கலவை கொண்டு கைகளைத் தேய்காது விட்டிருந்தால்,

- உங்களுடனான அவர்களது ஒவ்வொரு நடவடிக்கைகளுக்கு முன்பும், அவர்கள் கைகளைத் தொற்று நீக்கி விட்டார்களா என்று கேளுங்கள்.
- வைத்தியர்களிடமும் இந்தக் கேள்வியைக் கேட்கக் கூச்சப்படாதீர்கள்!

எப்படி நீங்கள் கேட்கலாம்? உதாரணமாக நீங்கள் இவ்வாறு கூறலாம்: „அனைவரும் கைகளைத் தொற்று நீக்கம் செய்தால், நான் நன்றியுடையவளா(னா)க இருப்பேன். அதனால் நீங்கள் கைகளைத் தொற்று நீக்கி விட்டீர்களா என்று கேட்க விரும்புகின்றேன்". அல்லது நீங்கள் இவ்வாறு கூறலாம்: „தொற்றுநோய்களையிட்டு நான் கவலைப்படுகின்றேன் ஆதலால், பணியாற்றுபவர்கள் எப்போதும் கைகளைத் தொற்று நீக்கினால் நான் மகிழ்ச்சியடைவேன். நீங்கள் உங்கள் கைகளைத் தொற்று நீக்கி விட்டீர்களா?".

நீங்களும் உங்கள் உறவினரும் வைத்தியசாலையில் தங்கியிருக்கும் காலத்தில், ஒழுங்கு தவறாது கைகளைத் தொற்று நீக்க வேண்டுமென்பதைக் கவனத்தில் கொள்ளுங்கள். மலசலகூடத்துக்குச் சென்றால் அதன் பின்பு கைகளைக் கழுவ வேண்டும் என்பது, ஒரு கட்டாய தேவை!

# மருந்துகள்



## ■ உங்கள் மருந்துகள் அனைத்தும் சரியாக இருக்க வேண்டும்.

நீங்கள் தற்போது உட்கொள்ளும் அனைத்து மருந்துகள் பற்றி வைத்தியரிடம் அல்லது ஒரு வைத்தியப்பராமரிப்பாளரிடம் தகவல் தெரிவியுங்கள். ஒரு பட்டியலிட்டுக் கொண்டு வருவது மிகச் சிறந்தது. „மென்மையான" கைமருந்துகள் பாவித்தாலும் அவற்றையும் கூறுங்கள். உதாரணமாக அவை மூலிகைகள், தாவர அல்லது ஹோமியோபதி மருந்துகள், சீன மருத்துவ மருந்துகள், விட்டமின்கள், தாதுப்பொருட்கள் (கனிமப்பொருட்கள்) உணவுப்பதிலீட்டுப் பொருட்கள் அல்லது முதுமையுறாதிருப்பதற்குப் பாவிக்கும் உற்பத்திப்பொருட்களாக இருக்கலாம். நீங்கள் தேவையேற்பட்டால் பாவிக்கும் மருந்துப்பொருட்களையும் (உ+மாக தலையிடி மாத்திரைகள்) மறந்து விடாதீர்கள். அத்துடன் உங்களுக்கு ஒத்துக் கொள்ளாத மருந்துவகைகளையும் கூறுங்கள்.

வைத்தியரிடம் அல்லது வைத்தியப்பராமரிப்பாளர்களிடம் உங்களுக்குள்ள ஒவ்வாமைநோய் (Allergien) பற்றித் தெரிவியுங்கள். உதாரணமாக

- மருந்துகள்
- உணவுப்பொருட்கள்

- வைத்தியசாலையில் பாவிக்கப்படுகின்ற தொற்றுநீக்கிகள், பிளாஸ்ரர், Kontrastmittel (உடல் உள்ளுறுப்புகளைக் கதிர்வீச்சுப்படம் எடுப்பதற்கு முன்பாக நோயாளிக்குக் கொடுக்கப்படும் ஒரு வகைச் சாயம் – நிறப்பொருள்)போன்றன
- ஒவ்வாமைத் தன்மையுள்ள வேறு பொருட்கள்

இக் கையேட்டின் இறுதிப்பக்கத்திலுள்ள பட்டியலில், நீங்கள் இந்த அனைத்து விடயங்களையும் குறித்துக் கொள்ளலாம்.

ஒவ்வொரு முறையும் புதிய மருந்துகளை உட்கொள்வதற்கு முன்,

- எதற்காக
- எவ்வாறு பாவிப்பது, அதனது பக்க விளைவுகள் என்ன என்பது பற்றி நீங்கள் அறிய வேண்டியது
- நீங்கள் தற்போது பாவிக்கும் மருந்தும் புதிய மருந்தும் ஒன்றையொன்று ஒத்துக் கொள்ளுமா என்பது பற்றியெல்லாம் கேளுங்கள்.

ஒரு மருந்தினை உட்கொண்ட பின், வழமைக்கு மாறான விளைவை நீங்கள் உணர்ந்தால், அதனை உடனடியாக ஒரு வைத்தியப்பராமரிப்பாளரிடம் அல்லது ஒரு வைத்தியரிடம் தெரிவியுங்கள்.
ஒவ்வொரு மருந்தையும் பாருங்கள். அது சரியான மருந்துதானா எனப் பரிசீலியுங்கள்.

உங்களுக்கு,

- ஒரு பிழையான மருந்து தரப்பட்டிருக்கின்றது
- ஒரு பிழையான அளவு தரப்பட்டிருக்கின்றது
- அந்த மருந்து பிழையான நேரத்துக்குத் தரப்பட்டிருக்கின்றது
- அளவுக்கதிகமான மருந்துகள் தரப்பட்டிருக்கின்றன

என்று நீங்கள் கருதுகின்ற பட்சத்தில், அதனைக் கூறுங்கள்.

உங்கள் சந்தேகம் முற்றாகத் தீர்க்கப்படும் வரையும், மருந்தினை உட்கொள்ளாதீர்கள்.
மருத்துவப்பராமரிப்பாளர்களிடம் அல்லது வைத்தியரிடம் வைத்தியசாலையில் உங்களுக்குத் தரப்படும் மருந்துகளின் பட்டியல் ஒன்றைத் தருமாறு கேளுங்கள்.

அடுத்தவர்களின் மருந்தினை ஒருபோதும் உட்கொள்ள வேண்டாம். உங்களது மருந்துகளை மற்றவருக்குக் கொடுக்க வேண்டாம்! உங்களுக்கு நன்மை பயக்கும் மருந்து, சிலவேளை வேறொருவருக்குப் பலமான சேதத்தை உண்டு பண்ணலாம்

உங்களது மருந்தினை எப்போதும் உங்களது கட்டிலருகேயிருக்கும் சிறிய மேசையின் (Nachttisch) மேல் வைத்திருக்க வேண்டுமேயொழிய, அறைக்குள் வேறெந்த இடத்திலும் அதனை வைக்கக் கூடாது. இப்படி வைப்பதன் மூலம், தவறுதலாக, வேறொருவர் அதனை உட்கொள்வதைத் தவிர்த்துக் கொள்கின்றீர்கள்.

# சிறிய அறுவைச்சிகிச்சைகள், சத்திரசிகிச்சைகளின் போது




■ சிறிய அறுவைச்சிகிச்சைகள், சத்திரசிகிச்சைகளுக்கு முன்னும் பின்னும் உங்களது அவதானிப்பு உதவுகின்றது.

திட்டமிடப்பட்ட சத்திரசிகிச்சை பற்றி, அனைத்தையும் நீங்கள் விளங்கிக்கொள்ளும் வரையும் வைத்தியரிடம் கேளுங்கள். கலந்துரையாடலின்போது, நீங்கள் விளங்கிக் கொண்டதை உங்கள் வார்த்தைகளில் மீண்டும் கூறுங்கள். நீங்கள் அனைத்தையும் புரிந்துகொண்டுள்ளீர்களா என்பதை இவ்வாறு பரிசீலித்துக்கொள்ளலாம். படங்கள் அல்லது வரைபடங்கள் திட்டமிடப்பட்ட சத்திரசிகிச்சையை நன்கு விளங்கிக்கொள்ள உதவும். அது பற்றிக் கேளுங்கள்!

திட்டமிடப்பட்ட உங்களது சத்திரசிகிச்சை பற்றிய விடயங்களைத்தெளிவுபடுத்தும் குறிப்பேட்டின் (Aufklärungs-protokoll) ஒரு பிரதியை வைத்தியரிடம் கேட்டு வாங்குங்கள்.

உங்களது உடம்பில் சத்திரசிகிச்சை நடைபெறவுள்ள இடம் ஒரு பேனாவினால் அடையாளமிடப்படும். சரியான இடத்தை அடையாளமிடுவதற்கு, உதவுங்கள்.
அது சரியான இடம்தானா என்பதில் உங்களுக்குச் சந்தேகம் ஏற்பட்டால், உடனடியாகத் தெளிவாகக் கூறுங்கள். சத்திரசிகிச்சை நடைபெறவுள்ள இடம் ஒருவேளை அடையாளமிடப்படாவிட்டால், ஏன் அப்படிச் செய்யவில்லை என்பதைப் பற்றிக் கேளுங்கள்.

சத்திரசிகிச்சைக்காயத்தைப் பாதுகாக்க உதவுங்கள்.
காயத்துக்குப் போடப்பட்டுள்ள கட்டை, தொற்றுநீக்கிய கைகளினால், வைத்தியர் அல்லது வைத்தியப்பராமரிப்பாளர்கள் மாத்திரம் மாற்றலாம். வலி, இதயத்துடிப்பு, சிவந்திருத்தல், ஈரலிப்பாதல், காயத்துக்குப்போடப்பட்டுள்ள கட்டு கழன்றால் அல்லது சத்திரசிகிச்சை நடந்த காயத்தில் வேறு பிரச்சினைகள் ஏற்பட்டால், உடனடியாக வைத்தியரிடம் அல்லது வைத்தியப்பராமரிப்பாளர்களிடம் தெரியப்படுத்துங்கள்.

சத்திரசிகிச்சைக்காயத்தைப் பரிசீலித்தலும், காயத்துக்குப் போடப்படும் கட்டை மாற்றுதலும் வைத்தியப்பராமரிப்பாளர்களினால் அல்லது வைத்தியரினால் மாத்திரம் செய்யப்படும்!

# குழப்பங்களைத் தவிர்த்தல்




## ■ சரியான நோயாளிக்குச் சரியானதைச் செய்தல்.

வைத்தியசாலையில் மிக அதிகமான மனிதர்கள் தங்குகின்றார்கள், சிலவேளைகளில் குறுதிய காலத்திற்கு மட்டும். நவீன மருத்துவத்தில் அடிக்கடி சிக்கலானதும் பன்முகப்பட்டதுமான வேலைகளை ஒரே நேரத்தில் செய்ய வேண்டியிருக்கும். இதன்போது, அனைத்தையும் கவனமாகச் செய்கின்றபோதிலும், விடயங்கள், தகவல்கள் அல்லது மனிதர்கள் சம்பந்தமான குழப்பங்கள் ஏற்படுவதுண்டு. அப்படி நடைபெறாதிருப்பதற்காக, நாம் எம்மாலான அனைத்தையும் செய்வோம்.
அப்படியிருந்தபோதிலும், எந்தக் குழப்பங்களும் நடைபெறாதிருப்பதற்கு, நீங்களும் உங்கள் பங்களிப்பையும் நல்கினால், அது உதவியாக இருக்கும்.

வைத்தியர்கள், வைத்தியப்பராமரிப்பாளர்கள், சிகிச்சையளிப்பவர்கள் நீங்கள்தான் அந்த நோயாளி என்பதைச் சரியாகத் தெரிந்துகொண்டுள்ளனரா என்பதை, நீங்கள் கவனித்துக் கொள்ளுங்கள். அதற்காக உங்களிடம் உதாரணமாக, உங்கள் குடும்பப்பெயர், முதற்பெயர், பிறந்த திகதி என்பவற்றைக் கேட்பர். இது ஒவ்வொரு பரிசோதனைக்கும் சிகிச்சைக்கும் முன்பும்

முக்கியமானது. சில வேளைகளில், பல தடவைகள் உங்களது அடையாளம் பற்றிக் கேட்கப்படுவீர்கள். ஒவ்வொரு தடவையும் ஒத்துழைத்து உதவுங்கள்! நீங்கள் ஒரு போதும் மாறுப்படாதிருப்பதற்காக, உங்கள் சரியான முதற்பெயரையும் குடும்பப்பெயரையும், கூறுங்கள்.

நீங்கள் பிழையான பெயரால் அழைக்கப்பட்டால் அல்லது தெளிவில்லாமல் உங்கள் பெயர் உச்சரிக்கப்பட்டால், அந்த மாறுபாட்டை உடனடியாகத் திருத்துங்கள் அத்துடன் நீங்கள் யார் என்பதைக் கூறுங்கள்.

உங்களுக்கு ஏதோ ஒன்றைச் செய்கின்ற வேளையில், அது உண்மையில் உங்களுக்குத்தானா என்பது உங்களுக்கு நிச்சயமில்லாதவிடத்து, அது பற்றிக் கேளுங்கள்.

உங்களுக்கு இரத்தமாற்றீடு செய்கின்ற வேளையில், இரத்தப்பையில் உங்களது முதற்பெயர், குடும்பப்பெயர், பிறந்ததிகதி சரியாக எழுதப்பட்டுள்ளதா என்பதைப் பரிசீலித்துக் கொள்ளுங்கள். இந்தப் பரிசீலனையை வைத்தியப்பராமரிப்பாளர்களுடன் அல்லது வைத்தியருடனிணைந்து செய்யுங்கள்.

பிறந்த குழந்தைகளுக்கும் சிசுக்களுக்குமான மகப்பேற்றுப்பிரிவுகளிலும் நிலையங்களிலும்: நீங்கள் தாய்ப்பாலினைக் கறந்து கொடுப்பதாக இருந்தால், பாலைக்கொண்டுள்ள பாத்திரத்திலும் பாற்போத்தலிலும் உங்கள் பிள்ளையின் முதற்பெயர் – குடும்பப்பெயர் சரியாக எழுதப்பட்டுள்ளதா என்பதைப் பார்த்துக்கொள்ளுங்கள்.

# வெளியேறுதல்



## வைத்தியசாலையிலிருந்து வெளியேறிய பின்பும் தொடர்ந்து நல்லபடியாக நடைபெறுவதற்கு

வைத்தியசாலையிலிருந்து வெளியேறுகின்ற போது, கீழ்க்காணும் விடயங்களை நீங்கள் தெளிவாகத் தெரிந்திருக்க வேண்டும்:

- மேற்கொண்டு நடைபெற வேண்டிய சிகிச்சைகளுக்கு யார் பொறுப்பு
- வெளியேறுதல் சம்பந்தமான அறிக்கை யாருக்குக் கொடுக்கப்படும்
- எதனை நீங்கள் கவனத்தில் கொள்ள வேண்டும்
- எந்த மருந்துகளை தொடர்ந்து எப்படி நீங்கள் பாவிக்க வேண்டும்
- எந்தப் புதிய மருந்துகளை நீங்கள் தொடர்ந்தும் பாவிக்க வேண்டும்
- முதலில் பாவித்த எந்த மருந்துக்குப் பதிலீடாக இன்னுமொரு மருந்து பாவிக்கப்படுகின்றது
- நீங்கள் சுகப்படுவதற்கு, எதனை நீங்கள் கவனத்திற் கொள்ள வேண்டும்
- எந்த அறிகுறிகளின் போது, நீங்கள் எங்கே அறிவிக்க வேண்டும்

- எங்கே நீங்கள் அனுப்பப்பட வேண்டும்
- எவ்வாறு அவ்விடத்தை நீங்கள் அடைவீர்கள்
- எவ்வாறு, யாரால் அங்கு நீங்கள் பராமரிக்கப்படுவீர்கள்

வெளியேறுதல் சம்பந்தமான அறிக்கையின் அல்லது சுருக்கறிக்கையின் பிரதியொன்றைத் தரும்படி கேளுங்கள். இந்த அறிக்கையில் உங்களது நோய், மருத்துவ ஆலோசனைகள், மருந்துகள் பற்றிக் குறிப்பிடப்பட்டிருக்கும்.

நீங்கள் தொடர்ந்தும் மருந்துகள் பாவிக்க வேண்டியிருந்தால், ஒரு மருந்தட்டவணையைத் தரும்படி கேளுங்கள். நீங்கள் எந்த மருந்தை, எப்போது, எப்படி, எவ்வளவு காலத்துக்கு, எந்த அளவு பாவிக்க வேண்டும் என்பது பற்றி இவ்வட்டவணையில் எழுதப்பட்டிருக்க வேண்டும்.

அடுத்து வரும் நாட்களுக்குத் தேவையான மருந்துகளும், மருந்து எழுதிய சிட்டைகளும் உங்களுக்குத் தரப்படுமா என்பதைக் கேளுங்கள்.

எப்போது அடுத்த வைத்தியக்கண்காணிப்புப்பரிசீலனை என்பதைப் பற்றியும், உங்களுக்குத் தேவையாக இருந்தால், வேலைக்குச் செல்ல முடியாதிருப்பதற்கான வைத்திய அத்தாட்சிப்பத்திரத்தையும் கேளுங்கள்.

# ஏற்படக்கூடிய ஒரு தவறு நடந்துவிட்டால், எவ்வாறு நடந்துகொள்வது?




ஏற்படக்கூடிய ஒரு தவறு உங்களுக்கு நடந்துவிட்டால் அல்லது தவறை நீங்கள் அவதானித்தால், உடனடியாக வைத்தியரிடம் அல்லது வைத்தியப்பராமரிப்பாளர்களிடம் தகவல் தெரிவியுங்கள். நீங்கள் வேறொரு காரியாலயத்தையும் அணுகலாம். சில வைத்தியசாலைகளில் நோயாளர்மையம், ஒம்புட்ஸ்மையம் அல்லது முறைப்பாட்டுமையம் போன்றவை உள்ளன. வைத்தியசாலைக்கு வெளியிலான தொடர்புமையங்களுமுள்ளன. ஒரு வைத்தியப்பராமரிப்பாளரிடம் அல்லது வைத்தியசாலையிலுள்ள ஒரு காரியாலயத்தில் யாரை நீங்கள் நாடலாம் என்பது பற்றிக் கூறும்படி கேளுங்கள்.

உங்களுக்கு ஏதாவது தவறு நடந்திருந்தால், சரியாக என்ன நடந்தது என்பது பற்றி வைத்தியரிடம் கேளுங்கள். நடந்த தவறின் பக்கவிளைவாக, உங்கள் உடல்நலத்திற்கு என்ன நடைபெறும் என்றும், மேலும் சேதங்கள் ஏற்படாமல் என்ன நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் கேளுங்கள்.

---

இது சம்பந்தமாக நீங்கள் எப்போதும் இவர்களை நாடலாம்:

நோயாளர்பாதுகாப்பு
spo – Patientenschutz
Häringstrasse 20
8001 Zürich
Telefon +41 (0)44 252 54 22
www.spo.ch

சுவிஸ் நோயாளர்மையங்களின் தலைமைச்சங்கம்
Dachverband Schweizerischer Patientenstellen
Hofwiesenstrasse 3 / Postgebäude Schaffhauserplatz
8042 Zürich
Telefon +41 (0)44 361 92 56
www.patientenstelle.ch

# இந்த ஆவணத்தின் உரிமையாளர்:

குடும்பப்பெயர்: ______________________

முதற்பெயர்: ______________________

பிறந்த திகதி: ______________________

நோயாளி தங்கியிருக்கும் வைத்தியசாலையின் பகுதி (இதில் மாற்றம் ஏற்படின், தயவுசெய்து அதற்கேற்ப திருத்தவும்):

______________________

______________________

______________________

- கலந்துரையாடலை, வைத்தியர்கள், வைத்தியப்பராமரிப்பாளர்களுடன் இணைந்து ஆயத்தப்படுத்தினால் உதவியாக இருக்கும். இங்கு நீங்கள் முக்கிய விடயங்களை எழுதலாம். உங்களிடம் ஏற்கனவே முற்றாகப் பூர்த்தி செய்யப்பட்ட மருந்து அட்டவணையும் ஒவ்வாமைநோய்க்கான அடையாள அட்டையும் இல்லாதிருந்தால், வைத்தியர்களுக்கும் வைத்தியப்பராமரிப்பாளர்களுக்கும் தகவல் தெரிவிப்பதற்கு, இந்தப் பட்டியலை நீங்கள் பயன்படுத்தலாம்.

- இங்கு உங்களுக்கு ஒவ்வாமைநோயை ஏற்படுத்துகின்ற அனைத்தையும் எழுதுங்கள். உதாரணமாக ஒத்துக்கொள்ளாத மருந்துகள், உணவுப்பொருட்கள், வைத்தியசாலையில் உபயோகிக்கும் தொற்றுநீக்கிகள், பிளாஸ்ரர், Kontrastmittel (உடல் உள்ளுறுப்புகளைக் கதிர்வீச்சுப்படம் எடுப்பதற்கு முன்பாக நோயாளிக்குக் கொடுக்கப்படும் ஒரு வகைச் சாயம் – நிறப்பொருள்)போன்றவையும், ஒத்துக்கொள்ளாத வேறு விடயங்களும்.

- எனக்கு ஒவ்வாமைநோயை (Allergie) ஏற்படுத்துவன

- ______________________
- ______________________
- ______________________
- ______________________
- ______________________
- ______________________

# எனது மருந்துகள்

- தற்போது நீங்கள் பாவிக்கும் மருந்துகள் அனைத்தையும், இங்கு எழுதுங்கள். «மென்மையான» கைமருந்துகளான மூலிகைகள், தாவர அல்லது ஹோமியோபதி மருந்துகள், சீன மருத்துவ மருந்துகள், விட்டமின்கள், தாதுப்பொருட்கள் (கனிமப்பொருட்கள்) உணவுப்பதிலீட்டுப் பொருட்கள் அல்லது முதுமையுறாதிருப்பதற்குப் பாவிக்கும் உற்பத்திப்பொருட்கள் என்பவற்றையும் நினைவுபடுத்தி எழுதுங்கள். நீங்கள், தேவையேற்படும்போது பாவிக்கும் மருந்துப்பொருட்களையும் (உ+மாக தலையிடி மாத்திரைகள்) மறந்து விடாதீர்கள். அத்துடன் உங்களுக்கு ஒத்துக் கொள்ளாத மருந்துவகைகளையும் எழுதுங்கள்.

- இம்மருந்துகளை நான் தற்போது உட்கொள்கின்றேன்:

- 
- 
- 
- 
- 
- 
- 

- இந்த மருந்துகள் எனக்கு ஒத்துக்கொள்வதில்லை:

- 
- 
- 
- 
- 
- 
- 

வினாக்கள், வேறு முக்கிய தகவல்களும் குறிப்புகளும்:

■

**patientensicherheit** schweiz
**sécurité des patients** suisse
**sicurezza dei pazienti** svizzera
**patient safety** switzerland

Stiftung für Patientensicherheit
Asylstrasse 77
CH-8032 Zürich
Telefon 043 244 14 80
info@patientensicherheit.ch
www.patientensicherheit.ch